# வடபகுதிக்கு பெற்றேல்,டீசல் அனுப்புவது பற்றி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 2 இதழ் 4
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-2-1995

## சந்திரிகா ஆலோசனை!

[கொழும்பு]
பெற்றேல் டீசல் ஆகிய வற்றை வடபகுதிக்கு அனுப்பு வது பற்றி ஜனாதிபதி திருமதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா ஆலோசனை செய்து வருவ

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழு வெள்ளி யாழ். வருகை

(கொழும்பு)
இனப் பிரச்னைத் தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துமுகமாக, 15 பிரதிநிதிகள் அடங்கிய சமாதானக் குழுவினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தென்பகுதி

(2ம் பக்கம் பார்க்க)

## 3,000 பேர் குழுவில் இடம்பெறுகின்றனர்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் வரவுள்ள சமாதானக் குழுவில் 3,000 பேர் இடம்பெற உள்ளதாசத் தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவில் நடைபெறும் பிரமாண்டமன கூட்டம் ஒன்றி

(4ம் பக்கம் பார்க்க)

## 550 கோடி ரூபா செலவில்

# வடபகுதிக்கான புனரமைப்பு

# வேலை அடுத்த மாதம் ஆரம்பம்!

## 3 மாதத்துக்குள் திட்டம் பூர்த்தி

[கொழும்பு]
வடபகுதியில் புனரமைப்பு வேலைகளை அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மூன்று மாதங்களுக்குள் இந்த வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்படும். 550 கோடி ரூபா செலவில் இந்த புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல்வாரத்தில் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகள், பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அத்துடன் மின்சார வசதிகளும் தொலைபேசி வசதிகளும் அங்கு

(2ம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்ட பேரணி கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]
ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட அசமந்தைப் போக்கை கண்டித்து நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட பேரணி சம்பந்தமான கலந்துரையாடல்கள் வலிகாமம் தீவகம் வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் பின்வரும் இடங்களில் நடைபெற இருக்கிறது.

வடமராட்சி:- நெல்லியடி மகாவித்தியாலயம் இன்று மாலை 4-00 மணி.

வலிகாமம்: - மருதனுமடம் இராமநாதன் கல்லூரி இன்று

(4ம் பக்கம் பார்க்க)

## பொதுநல அமைப்புச் செயலர் புலிகளை சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)
பொதுநல அமைப்புகளின் ஆசியப் பிரிவுச் செயலர் திரு. மார்க்ஸ்ஹோமஸ் அடுத்த சல தினங்களில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார்.

தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் இவர் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு தரப்பினரை சந்தித்த இவர் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சி-இ

## யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]
இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் கடைப்பிடிக்கும் அசமந்தப்போக்கை கண்டித்து எதிர்வரும் 17ம் திகதி வெள்ளிக்கிழமை, யாழ். நகரில் நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் பிரசனை

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பாதுகாப்புச் செயலர் பதவி:

# சிவில் அதிகாரி நியமனத்திற்கு ஹரி குணதிலகா எதிர்ப்பு

(கொழும்பு)
''சிவிலியன் ஒருவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக, தற்போதைய நிலையில் அரசு நியமித்திருக்கக்கூடாது,

இவ்வாறு விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணத்திலகா கூறியுள்ளார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

''1983ம் ஆண்டுக்கு முன்பு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஒரு சிவிலியனே பதவி வகித்து வந்துள்ளார்.

அப்போது முப்படையினரின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 30ஆயிரமாகவே இருந்தது. தற்போது முப்படையினரினதும் - பொலிஸ் படையினரினதும் மொத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் விண்ணப்பம் கோரிக்கை

(கொழும்பு)
கல்வி, உயர்கல்வியமைச்சு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்குரிய கடைசித் திகதி இம்மாதம் 28ம் திகதியாகும்.

இதுபற்றிய மேலதிக விபரங்கள் இன்று 14ம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வடபகுதியிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)
இராணுவக் கட்டுப்பாடற்ற வடபகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை மிக மோசமாக உள்ளதென்பதை ஏற்றுக்கொண்டு, இவ்வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும் முதற் கட்ட நடவடிக்கையாக அங்குள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க கல்வி, உயர் கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளதாகப் பிரதிக் கல்வி அமைச்சர் திரு.

(4ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து ஆலையை மீண்டும் இயக்க அரசு முயற்சி

[கொழும்பு]
காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக, வீடமைப்பு நிர்மாண, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் தலைமையிலான குழு ஒன்று அண்மையில் சிமெந்து கூட்டுத்தாபன தலைவரை சந்தித்து இதுசம்

(4ம் பக்கம் பார்க்க)

# இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணலியம்பதி-கிழக்கு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய மாதாந்த திருவிளக்குப் பூசை, சுமங்கலிப் பூசை இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு விசேட அபிடேக பூசை, ஆராதனை வழிபாட்டை அடுத்து சுமங்கலி-திருவிளக்குப் பூசைகள் இடம்பெறும், -154

0 0

(யாழ்ப்பாணம்)

''அறிவுக் களஞ்சியம்'' சிறப்புப் பொது அறிவுப் போட்டியின் விஞடி விஞப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8-30 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெறும்,

0 0

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிராந்திய தொலைக்கல்வி நிலையத்துடன் இணைக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான பொதுப் பரீட்சை ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெற இருப்பதனுல் இது தொடர்பான சகல பயிலுநர் ஆசிரியர்களின் விபரங்கள் பெறும் பொருட்டு இன்று செவ்வாய் காலை 8-30மணிக்கு நிலையத்தில் ஒன்று கூடுமாறு சிரேஷ்ட போதனுசிரியர் கேட்டுக்கொள்கின்றனர்.

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புதுறை கிழக்கு ஆத்தியாம்பதி ஸ்ரீசந்திரசேகர விநாயகர் கோவில் வருடாந்த உற்சவத்தின் 8ம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சப்பற திருவிழா இடம் பெறும். 154

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1995-02-14

செவ்வாய் இரவு

08-01 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் -தகவற் களஞ்சியம்
08-20 நலந்தானு - நிகழ்ச்சியில் ''இரத்ததானம்'' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை வழங்குவார்
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம்-இ.இராஜேஸ்வரன் எழுதிய ''எதிர்பார்ப்பு''
08-50 மலரும் மொட்டுக்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### 1995-02-15

புதன் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

### 1995-02-14

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானெலி மதியூகம்
06-00 சிந்த னக்குச் சில விஞடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

(கொழும்புத்துறை)

உரும்பிராய் ஸ்ரீ பார்வதவத்தினி அம்மன் கோவிலின் மாதாந்த பூரணை தின திருவிளக்குப்பூசை' சுமங்கலி பூசைகள் இன்று செவ்வாய்க் கிழமை மாலை4-00 மணிக்கு ஆலயப்பிரதமகுரு பிரம்மஸ்ரீ .க.மு சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். 154

0 0

(யாழ்ப்பாணம்)

நல்லைத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் கவிதைப் பட்டிமண்டபம் கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 3-00 மணிக்கு கவிஞர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும்.

0 -ம

(யாழ்ப்பாணம்)

தெணியானின் மரக் கொக்கு நாவல் அறிமுக விழா யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரன் தலைமையில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இன்று 14-ம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவகுருநாதபீடம் வேதாந்த மடம் பரிபாலன சபையின் மாதாந்தச் சொற்பொழிவு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். ''பெறுதற்கரிய பிறவி'' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சி. சரவணமுத்து சொற்பொழிவாற்றுவார்.

0 0

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வலயம் இரண்டில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. சி. வேலாயுதத்திற்கு உடுவில் கல்விக்கோட்ட அதிபர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை மதிய போசன விருந்தும், சேவை நலன் பாராட்டு விழாவும் நடாத்தவுள்ளனர். -109

0 0 0

(வட்டுக்கோட்டை)

அராலி இந்துக் கல்லூரி வருடாந்தஇல்ல விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் எஸ். செல்வராசாதலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. 0 139

(உடுவில்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. 109

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும்முழுநிலா அறிவியல் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பி-ப-4-00 மணி தொடக்கம் 5-30 மணி வரை சுன்னுகம்பெரியமதவடி பொது நூலகத்தில் ''பருவ வயதினர்'' எனும் பொருள் பற்றி டாக்டர்,ஏ,சசிகாந்தன் கருத்துறை வழங்குவார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணய்)

சங்கீத பாடநெறிக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கும், செயலமர்வும் எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 தொடக்கம் சென். ஜோன்ஸ் அக்டமியில் நடைபெறும். வேலணை— ஊர்காவற்துறை கோட்டங்களைச் சேர்ந்தஇசை ஆசிரியர்கள் யாவரும் சமுகமளிக்கும்படி திரு. எல். திலகநாயகம் போல் கேட்டுக் கொள்கிருர். 162

## 550 கோடி ரூபா செலவில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொடுக்கப்படவுள்ளன. பருத்தித்துறை யாழ்ப்பாண வீதி முக்கியமாக திருத்தப்படும்.

இது சம்பந்தமான செயலணிக்குழுவின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தலைமையில் வடக்கு அபிவிருத்திக்கான உயர்மட்ட செயலணிக்குழு (Task Force) நேற்று கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ஜனுதிபதியின் செயலகத்தில் கூடியது'

ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் விசேட பணிப்புரையின் கீழ் நடை பெற்ற இக் கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கே. பொன்னம்பலம், யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் ஆகியோர் அவசர அவசரமாக கொழும்பிற்கு அழைக்கப்டிருந்தனர்,

மார்ச்மாதம் முதல் வாரத்திலிருந்து இதற்கான வேலைகளை ஆரம்பிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைகள் யாவும் 3 மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலகத்தை புனர்நிர்மாணம் செய்யும் வேலைகளும் இச் செயலணியினுல் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். பொதுசன நூலகம் முன்பு எவ்வாறு இருந்ததோ அதேபோன்று மீண்டும் நிர்மானிப்பதற்கான திட்டங்களை வகுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வேலைக்கான திட்டங்களுச்கான திட்டங்கள் யாவும் இருவார காலத்துள் சமர்பபிக்கப் படவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

வடக்கில 'டிஜிற்றல்' வானெலி தொடர்பு முறையை அமைப்பது பற்றி ஆராயுமாறு தொலைதொடர்புகள் திணைக்களம் பணிக்கப்பட்டுள்ளது

இலங்கை மின்சார சபை, யாழ் மாநகரசபைப் பகுதிக்குள் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகப் புதிய ஜெனரேற்றர் ஒன்றை வழங்கும்.

யாழ். மாவட்ட வைத்திய சாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் போதிய மருந்து வகைகளும், கருவிகளும் வழங்கப்படவுள்ளன.

இதற்கெனக் கொழும்லல் உள்ள பிரதான அலுவலகத்தைவிட, யாழ்ப்பாண செயலகத்தில் செயலணிப் பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம், சகல உபரணங்களையும் கொண்ட செயலகத்தை அமைத்துக் கொடுக்கவும், ஆலோசகர் ஒருவரை நியமிக்கவும், இரு செயலர்களை அமர்த்தவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கெனச் செயலணிக் குழுவின் பிரதிநிதிகள் குழு, அடுத்த மாதம் முதலாம் திகதியளவில யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவும் ஏற்பாடாகியுள்ளது

இதற்கென நீண்டகால அடிப்படையில் உதவி பெறும் வாய்ப்புப் பற்றிச் செயலணிக் குழு. நன்கொடை வழங்கும் நாடுகளையும், ஏனைய முகவர் நிறுவனங்களையும் இம்மாதம் 27ம் திகதி சந்தித்துப் பேச உள்ளது.

மேற்படி கூட்டத்தில், ஜனுதிபதியின் செயலர் கே. பாலபத்தபெண்டி, நவின் குணரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டிலான் பெரேரா, சாலிய திசநாயக்க, சாந்த பிரேமரத்ன உட்படச் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். க-இ

## தவறிவிட்டது

சாவகச்சேரி மடத்தடிக்கும் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு மிடையே முத்துத்தோடு ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் சிவம் மெடிக்கல்ஸ சாவகச்சேரியில் கொடுத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். (ஏ-4780)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 11-4-1904

மறைவு : 5-3-1993

திதி : 14-2-1995

### திருமதி அன்னம்மா பொன்னுத்துரை

(கோண்டாவில் மேற்கு)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்ருேம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சிங்கம்ஸ் இல்லம்,
கோண்டாவில் மேற்கு. (ஏ-4778)

## சிறிலங்கா அரசின் அசமந்தமான போக்கை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டபேரணி

தமிழ் மக்களின் மேல் திணிக்கப்பட்ட பொருளாதார தடையை முற்ருக நீக்காமலும் அதே நேரத்தில் இராணுவ அழுத்தங்களை தொடர்ந்து நடாத்தி வருவதையும் கண்டித்து வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை எதிர் வரும் 17-02-95 வெள்ளிக் கிழமை பகல் 10-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்தில் ஆரம்பித்து பலாலி வீதியூடாக கந்தர் மடச்சந்தியை அடைந்து கோவில் வீதியூடாக யாழ். செஞ்சிலுவைச் சங்க கந்தோர் வழியாக சென்று இறுதியாக யாழ். செயலகத்தை அடைந்து தமிழ் மக்களின் சகல பிரச்சனைக்கும் ஆன மகஜர் அரசாங்க அதிபர் ஊடாக ஜனுதிபதிக்கும், வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் கையளிக்கப் படும் என தீர்மானிக்கப்பட்டது.

இந்த பிரமாண்டமான பேரணியில் சகல வர்த்தகர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் கலந்து தங்கள் உணர்ச்சி பூர்வமான கோசங்களை எழுப்பி எமது அன்ருட பிரச்சனையை சிறிலங்கா அரசிற்கும். வெளிநாடுகளுக்கும் தெரிவிப்போமாக.

யாழ். வணிகர் கழகம்

(ஏ-4779)

## சமாதானக் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தலைவர்கள், மத அமைப்புக்கள் மற்றும் மகளிர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரையும் சந்திக்கும் இக்குழுவினர், விரிவான அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற பிரதிநிதிகள். புத்திஜீவிகள் உட்பலரும் இககுழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை இக்குழுவினரின் யாழ்ம்பாண வருகையை விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. க-இ

## 5 கிலோ மா இன்று முதல் விநியோகம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இன்று முதல், 'அ', 'உ' அட்டைக்கு ஐந்து கிலோ மா வழங்கப் படும் என யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களப் பிரிவு அறிவித்துள்ளது. 71-இ

### மணிவாக்கு

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளர்களிடமும் சிவபெருமானை காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான். சிவபெருமானைவிக்கிரகத்தில் மட்டும் காண்பவனுடைய வழிபாடு ஆரம்ப வழிபாடுதான் உள்ளது.

- விவேகானந்தர்.

## நமது நோக்கு

### பிடியை இறுக்கல்

பாதுகாப்புச் செயலர் பதவி மற்றத்தின் மூலம் படைகள் மேல் ஜனாதிபதியின் பிடியும் இறுகுகிறது என பி. பி. ஸி. கருத்து வெளியிட்டிருக்கிறது.

நிரந்தரமாக ஒருவரை நியமிக்கும்வரை, தனது செயலாளரையே இப்பதவிக்கு ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில், இராணுவத்தின் மூலம் தமது ஆட்சியை மாத்திரமல்லாது, கட்சியினைப் பாதுகாத்திடவும் எண்ணிச் செயற்பட்டதை நாடறியும்.

ஆனால் நடந்தது என்ன?

எந்த இராணுவம் தமக்கு உதவும் என எண்ணினார்களோ அந்த இராணுவம் இடையூறாகவும்இருந்தது.

குறிப்பாக - மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா இட்ட கட்டளைகளை இதய சுத்தியோடு நடைமுறைப்படுத்தாது, இழுத்தடித்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டன.

அதனால் - அவர் நினைத்ததைச் செய்ய முடியாத சிறைக் கைதிபோலச் செயற்பட்டார்; பேசிச் சமாளித்தார்.

இன்று கூட - நல்ல நோக்கத்தோடு அறிவித்த சில கொள்கைகள் இராணுவத்தின் செயற்பாட்டால் பூரணமாக அமுல் நடாத்தப்படவில்லை.

முணுமுணுப்பும் முட்டுக்கட்டைகளும், தாமதங்களும் ஏற்பட்டதால். அரசு செய்த அறிவிப்புகள் 'புஷ் வாணமாகவே' மாறிவிட்டது.

உதாரணமாக - பொருளாதாரத்தடைத் தளர்வு எதைச் சாதித்தது?

மின்கல அடுக்குகள் (பற்றறிகள்) மீதுள்ள தடை அகற்றப்பட்டது எனத்தான் அரசு அறிவித்தது.

ஆனால் - எளிதாக அவை யாழ். குடாநாட்டுக்கு வரமுடிகிறதா? அனுமதிப் பத்திரங்கள் கேட்டு வீணான தாமதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

எனவேதான் - அரசு எடுக்கும் சமாதான முயற்சிகள் நியாயமானமுறையில் வெற்றிதரவேண்டுமாயின் தாமதங்கள், தடைகள் அகற்றப்படவேண்டுமென்பதை அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோம்.

அந்த வகையில் - தாமதங்கள் ஏற்படுத்துவோர் மீது பிடியை இறுக்கி, சொற்படி நடக்கவைக்க ஜனாதிபதி முயற்சி எடுக்கிறார் என எண்ணவேண்டியுள்ளது!

---

### வடக்கு — கிழக்கில்

# காணமல் போனோர் குறித்து இதுவரை 1,200 புகார்கள்

(கொழும்பு)

1988-ம் ஆண்டின் பின் வடக்கு-கிழக்கில் காணமல் போனவர்கள் பற்றி இதுவரை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 1,200 புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

1988 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இப்பகுதியில் காணமல் போனவர்கள்பற்றி ஆராய முன்னாள் நீதியரசர் திரு. கே. பாலகிட்ணரை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார். இந்த ஆணைக்குழு தனக்கு கிடைக்கும் புகார்கள் தொடர்பான விசாரணைகளை மார்ச் 2-ம் திகதி முதல் ஆரம்பிக்கும்.

இந்த ஆணைக்குழு கொழும்பு-12 இல் ஹல்ஸ்ரப்பில் உள்ள நீதியமைச்சின் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. காணமல் போனோர் பற்றிய புகார்களை மார்ச் மாதம் 15-ம் திகதிவரைஇந்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க முடியும், புகார சமர்ப்பிப்பதற்கான கால எல்லை போதுமானதாயில்லை என தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே பெப்ரவரி 15ம் திகதி வரையான காலஎல்லை மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது.

காணமல் போனவர்களின் பெற்றோர்கள். உறவினர்கள், நண்பர்கள் இது குறித்த புகார்களை உடனடியாக தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (சி)

---

★ இறுல் பண்ணையில் கொள்ளை

### மதுரங்குளியில் ஆர்ப்பாட்டத்தில்

# பொலிஸ் கண்ணீர்புகைவீச்சு

(கொழும்பு)

மதுரங்குளிப் பகுதியிலுள்ள இறுல் பண்ணையில் கொள்ளை கூட்டத்தினர் நடத்திய அட்டகாசத்தால் அப்பகுதியில் பெரும் பதற்றம் எழுந்துள்ளது.

இந்த இறுல் பண்ணைக்குள் புகுந்த கொள்ளையர் அங்கிருந்து பல லட்ச ரூபா பணத்தையும், பெறுமதிமிக்க பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றதுடன் பல பொருட்களையும் நாசம் செய்துள்ளனர்.

இதனையடுத்து அப்பண்ணையில் தொழில் புரியும் ஊழியர்களும், அப்பகுதி மக்களும் பெரும் ஆர்ப்பாட்டம் செய்ததால் அதனை கட்டுப்படுத்த பொலிசார் வன்முறையில் இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

ஆர்ப்பாட்டக்காரரைக் கட்டுப்படுத்த பொலிசார் கண்ணீர்புகைக் குண்டுகள் பிரயோகிக்கப்பட்டதுடன் தடியடிப் பிரயோகத்ததுடன் இறங்கினர். இதனால் மதுரங்குளிப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -சி

---

# பஸ், ரயில் கட்டணங்களை உயர்த்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

பொதுசன முன்னணி அரசு பஸ். ரயில் கட்டணங்களை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும், இந்தக் கட்டண அதிகரிப்பு மிக விரைவில் அமுலுக்கு வருமெனவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டீசல், பெற்றோல் விலைகளை அதிகரித்த அரசு தற்போது அதனைச் சாட்டாக வைத்து பஸ், ரயில் கட்டணங்களை உயர்த்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இதனால் சகல பொருட்களினதும் விலைகள் படிப்படியாக உயரும் நிலை எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலையில் எதுவித அதிகரிப்பும் செய்யப்படாதபோதும்அரசே டீசல், பெற்றோல் விலையை அதிகரித்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

பட்ஜட்டில் துண்டு விழும் தொகையை சரிசெய்யவே அரசு இந்த விலை அதிகரிப்பு, கட்டண உயர்வு நடவடிக்கைகளில் இறங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, -சி

---

### நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு

# ரூ. 50 கோடி நிலுவைப்பணம்

## 100 வர்த்தகர் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அரிசி ஆலை சொந்தக்காரர்கள் சுமார் 50 கோடி ரூபாவை நிலுவைப் பணமாக செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அரிசி ஆலை சொந்தக்காரர்களிடமிருந்து தமக்கு கிடைக்கவேண்டிய 50 கோடி ரூபாவையும் அறவிடுவதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபை சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரிசியைக் குத்திய பின்னர் பணத்திற்கு பதிலாக அரிசியைத் தருவதாக வாக்களித்ததன் பேரில் நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்த பல அரிசி ஆலைக்காரர்கள் அவ்விதம் கொடுகாததால் 50 கோடி ரூபா வரை நிலுவைப்பணமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

1988-ம் ஆண்டு முதல் சுமார் 100 அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் இந்தப் பணத்தைச் செலுத்தவேண்டும். இதுபற்றிய விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் பணத்தை அறவிட பொலிஸ் மோசடிப் பிரிவின் உதவியை சபை நாடியுள்ளது. -சி

---

### விவசாயிகளுக்கு உர மானியம்

(கொழும்பு)

எதிர்வரும் காலபோகத்தில் நெல் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பசளை உரம் பெறுவதற்கு 500 ரூபா வழங்குவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் படி ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கரில் விவசாயம் செய்யும் விவசாயி ரூபா 500ஐ உர மானியமாகப் பெற முடியும். இத்திட்டத்துக்கு அரசுக்கு சுமார் 1200 கோடி ரூபா செலவாகுமென்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. -வி-ரி

---

வீட்டுக்குப் பழமரங்கள்

வீதிக்கு நிழல் மரங்கள்.

---

# கோடீஸ்வரரான பாதுகாப்பு அதிகாரி

— சி. ஐ. டியினர் விசாரணை |

(கொழும்பு)

பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கோடீஸ்வரனானது குறித்து சி. ஐ. டி. பொலிசார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதுகாப்பு அதிகாரிக்கு இவ்வளவு பணம் எவ்வாறு கிடைத்தது என்பது குறித்தும் இவரது சொத்துக்கள், குடும்ப விபரங்கள், அவரது பின்னணி குறித்தும் சி. ஐ. டி. பொலிசார் தீவிரமாக விசாரித்து வருகிறார்கள்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஹமில்டன் வனசிங்க தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளதும், அவர் சம்பந்தப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதக் கொள்வனவு குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே. -சி

---

### தென்னங்கன்று விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் மொத்தம் 225 தென்னங்கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார். -154

## பலதும் பத்தும்

### காக்காய் வலிப்பு

மனிதன் தோன்றிய போதே... கடவுள் நோய்களையும் படைத்துவிட்டார். அவற்றைத் தீர்க்க மருத்துவ அறிவையும் படைத்தார்.

ஆனால்... சில தவறான நம்பிக்கையும், திரிபுகளும் சமூகத்தில் ஏற்பட்டு விட்டனவாம். உதாரணமாக... காக்காய்வலிப்பு என்றதும், காக்காய் ... சனியின் பார்வை .. இரும்புத்துண்டு என்ற கற்பனைகள் வளர்ந்து விட்டன.

கை, கால் வலிப்புத்தான் காக்காய் வலிப்பாகத் திரிந்து விட்டது. மூளையின் நரம்பு மேலதிகமாகத் தூண்டப்படுவதால், உடலின் ஒரு பகுதி வெட்டி வெட்டி இழுக்கும். நாக்கைப் 'பதம் பார்க்காதிருக்க' பற்களுக்கிடையே ஏதாவது ஒன்றைக் கொடுப்பது அவசியம்.

ஆனால் சிலர் முதலில் கைகளில் இரும்புச்சாவியைக் கொடுப்பதால் மருத்துவப் பலன் இல்லையாம்... நோயாளிக்கு நம்பிக்கை ஊட்ட உதவக் கூடும்!

— மயூரன்

## இராசிபலன்

14-02-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி —02)

சதுர்த்தசி மாலை 6-38 வரை, பூசம் பி. ப. 1-18 வரை, சித்தயோகம், இராகு காலம் மாலை 3-33 முதல் 5-03 வரை, சுபவேளை பகல் 11-03 முதல் 12-33 வரை.

மேடம்: தொழில் விரோதம், முதியோர் வன்மம், மனச் சுமை.

இடபம்: வசதியான மாற்றம், விருந்தோம்பல், பயணம்.

மிதுனம்: குதர்க்கவாதம், குடும்ப தகராறு, வேதனை.

கடகம்: மன மாற்றம், குடும்பசுகம், சுபச் செலவு.

சிங்கம்: உறவினர் பகை, முயற்சி தாமதம், மனப் பயம்.

கன்னி: எதிர்பாராத உதவி வைத்திய செலவு, சமாதான முயற்சி.

துலாம்: புதிய திருப்பம் திருமணயோகம், பணவரவு.

விருச்சிகம்: உடல் நோய், மனைவி துயர், கோப வார்த்தை.

தனுசு: துயர செய்தி, கடன்படல், வேலைக் கஷ்டம்.

மகரம்: அதிக முதலீடு, குடும்ப மகிழ்ச்சி, அன்னியர் தொடர்பு,

கும்பம்: புத்திரர் பெருமை, பொதுப்பணி, தெய்வீகப் பணி

மீனம்: அமைதியற்றநிலை மனசஞ்சலம், வெறுப்பு.

ஜோஸ்யர்

# புலிகள் சமாதானப் பேச்சை புறக்கணிக்கவில்லை — இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் புறக்கணிக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகளால் எதுவித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. எமது மக்களின் அன்றாட பிரச்னைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும்.''

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியத்தின் சார்பில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் கலந்து கொண்டு யாழ். மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் சிறில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இளம்பரிதி தொடர்ந்து பேசுகையில்:

எமது மக்களின் அபிலாஷைகள் தீர்த்துவைக்கப்பட வேண்டும். போக்குவரத்துப்பிரச்னைகள் எவருடைய தலையீடுமின்றி சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் நடைபெறவேண்டும். இதற்கென பூநகரியினூடான பாதை திறக்கப்படவேண்டும். அங்கிருக்கும் இராணுவந்தினர் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் பதவிகளுக்காக போராடவில்லை பணத்துக்காகவும் போராடவில்லை நாம் எமது உரிமைக்காகப் போராடி வருகிறோம். எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காகப் போராடிவருகிறோம். வெளிநாட்டுக் கண்காணிப்புக்குழுவினர் இங்கு வந்திருந்தார்கள். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைகளைப் பார்வையிட்டார்கள்.

நாம் பலமான நிலையில் இருக்கிறோம். எமது மக்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படவேண்டும். இதற்காகவே நாம் பலமான நிலையில் இருந்து கொண்டு சமாதானப் பேச்சுக்களுக்காக எமதுகதவைத் திறந்து வைத்திருக்கிறோம்.

எமது தேசியத்தலைவர் எந்நேரமும் நாம் சமாதானப் பேச்சுக்குத்தயாராக இருக்கின்றோம் என்று அறிவித்திருக்கிறார். நல்ல ஒரு தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைக்குமானால் அதைப் பரிசீலனை செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம்.

தென்பகுதியில் உள்ள பெரும்பான்மைச் சிங்கள மக்கள் இன்றைய யுத்தத்தை விரும்பவில்லை, சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்பதே பெரும்பான்மைச் சிங்கள மக்களின் விருப்பமாகும் என்றார். 162-இ

'சண்டே லீடர்,

# பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டதற்கு விசாரணை

(கொழும்பு)

'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் வசந்தவிக்கிரமசிங்கா மற்றும் அவரது மனைவியான டென்ஸி விக்கிரமசிங்கா ஆகியோர் மீதான தாக்குதல் குறித்து விசேட பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்படும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான புலன் விசாரணைக்கு விசேட பொலிஸ் கோஷ்டி நியமிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். திரு. வசந்த விக்கிரமசிங்காவும் அவரது மனைவி அவர்களது வீட்டுக்கருகில் தாக்கப்பட்டமைக்கு பத்திரிகை அமைப்புக்கள் கண்டனம் தெரிவிக்கப்பட்டதையடுத்து மேறகண்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. -க-ரி-சி

பாதுகாப்புச்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை இரண்டு லட்சத்துக்கும் மேலானது.

ஆகவே தற்போதைய நிலையில், அனுபவம் வாய்ந்த ஒரு பாதுகாப்புப் படையின் அதிகாரியே இப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும்'' என்று கூறியுள்ளார். (வி-இ)

யாழ். வணிகர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய கோரிக்கைகளை, அரசாங்கத்துக்கும், சர்வதேச மட்டத்துக்கும் எட்டவேண்டும் என்ற குறிக்கோளுடனே இந்த ஆர்ப்பாட்டப்பேரணி நடாத்தப்படுவதாக, யாழ். வணிகர் கழகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. [வி-இ]

இன்று

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

14-02-1987ல் நாவற்குழி சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பிற்கான முயற்சியில் தவறுதலாக வெடித்த பவுசர் குண்டினால் வீரச்சாவைத் தழுவிய லெப். கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ் உட்படப் பதது வேங்கைகள் நினைவும், அச்சம்பவத்தில் சாவைத் தழுவிய பொதுமக்கள் நினைவும் இன்று செவ்வாய் இரவு 8-00 மணிக்கு கைதடி வடக்கில் வெடிவிபத்து ஏற்பட்ட இடத்தில் நடைபெறும்.

## விசேட முற்பணம்

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி மாதச் சம்பளத்துடன், விழா முற்பணம் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு ஏற்ப ரூபா ஆயிரம் விசேட முற்பணம் ஆகியவற்றை ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார். -இ

காங்கேசன்துறை

# சிமெந்து தொழிற்சாலையை மீண்டும் திறக்க கோரிக்கை

(கொழும்பு)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற் சாலையை மீண்டும ஆரம்பிப்பதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம் தற்போதைய சந்திரிகா அரசுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் ஜனாதிபதிக்கு வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; காங்கேசன்துறை லங்கா சிமெந்து தொழிற்சாலை மீண்டும இயங்காமல் விட்டதையடுத்துஅதில் வேலைசெய்த பெருமளவு தொழிலாளர்கள் பல்வேறு கஸ்டங்களை சந்திக்கவேண்டியுள்ளது.

தற்போதைய சமாதான சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி அத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்ய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-சி

வடபகுதியிலுள்ள
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செனிவரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கல்வி, உயர் கல்வி அமைச்சில் நடைபெற்ற ஆசிரியர் சங்கங்களுடனான மாதாந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்னைகள் தொடர்பாகப் பதிலளிக்கையிலேயே பிரதிக் கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு பேசிய பிரதிக் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது: வவுனியா மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை முடிவடைந்துள்ளதாகவும், இதுபோல் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள தொண்டர் ஆசிரியர்களையும் விரைவாக அம்மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர்களைக் கொண்டு நேர்முகப் பரீட்சை நடாத்தி, நிரந்தமாக்குவதற்கான நடவடிக்கைகளைக் கல்வி, உயர் கல்வி அமைச்சு மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

1977, 1983ம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு மீண்டும் முன்னைய இடங்களுக்குத் திரும்பாமல் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பிரதேசங்களில் சேவை செய்ய விரும்பும் ஆசிரியர்களுக்கும் அங்கு சேவையாற்ற அனுமதியளிப்பதாகவும் பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, -இ

காங்கேசன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தமான பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைப் பிரதேசத்தை இராணுவ சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவது; அங்குள்ள விடுதிகள், வீடுகளை சீரமைப்பது; தொழிற்சாலையில் முன்பு வேலைசெய்த அனைத்து தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலைவழங்குவது; தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது போன்ற விடயங்கள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

சிமெந்து கூட்டுத்தாபன இயக்குநர் சபையில், வடபகுதி மக்களுக்கு பூரண பிரதிநிதித்துவம் வழங்குவது பற்றியும், காங்கேசன்துறை துறைமுகத்தை சிவில் நிர்வாகத்துக்கும்பொதுமக்களின் பாவனைக்கும் திறந்து விடுவது பற்றியும் மேலும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் சிமெந்து கூட்டுத்தாபனத் தலைவர் உரையாற்றுகையில்; காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையின் திருத்த வேலைகள் முன் கூட்டியே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. பாதுகாப்பு அதிகாரிகளுடன் இதுபற்றி ஆராயப்பட்ட பின்பே இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது, என்றும் அவர் கூறினர். [வி-இ]

வடபகுதிக்கு
1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக ஏ. எப். பி. செய்திகள் நேற்று தெரிவித்தன.

மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்தில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க அரசு முடிவு செய்துள்ள இவ்வேளையில் இது வரை காலமும் வடபகுதிக்குள் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களை மீண்டும் அங்கு அனுப்புவது பற்றி, ஜனாதிபதி திருமதி சந்திரிகா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தற்போது தீவிரமாக ஆலோசனை நடாத்தி வருவதாகவும் மேற்படி செய்திகள் தெரிவிக்கின்றன. [வி-இ]

3,000 பேர்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இக்குழுவினர் கலந்து கொள்வார்கள்.

இதேவேளையில் கடந்த டிசம்பர் மாதம் 8ம் திகதி சமாதான பேரணி ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டதும் அதன் விபரங்கள் விடுதலைப்புலிகளிடமும் அரசாங்கத்திடமும் கையளிக்கப் பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமான ஊர்வலங்கள் காலி, மாத்தறை, குருநாகல், அநுராதபுரம், கண்டி போன்ற இடங்களில் நடாத்தப்பட்டதுடன் 20ஆயிரத்திற்கு மேற்பட்ட கையொப்பங்களும் பெறப்பட்டு அவை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படிகுழுவினர் எதிர் வரும் 17 திகதி விடுதலைப் புலிகள்தலைவர் திரு.வே. பிரபாகரனை சந்தித்து விரிவாக பேச்சுவார்த்தை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். க-இ

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடம்

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டுக்குட்பட்ட சங்கானை, மருதங்கேணி ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றுக்குறையை விரைவில் நீக்குவதற்கு கல்வித் திணைக்களத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக இங்கு கடமையாற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கல்வித் திணைக்களம் சேகரித்து வருகின்றது,

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தெரிவுக்கான எழுத்துப் பரீட்சையொன்றினை எதிர் வரும் 18-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. -109-சி

ஆர்ப்பாட்ட
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 4-00 மணி.

தீவகம் இடம் பெயர்ந்த தீவமக்கள் நலகாக்கும் கழகம் யாழ்ப்பாணம் நாளை 15-ம் திகதி காலை 9-00 மணி

தென்மராட்சி நாளை 15-ம் திகதி சாவகச்சேரி நகரசபை மண்டபம் காலை 10 - 00 மணி.

அனைத்து வெகுஜன அமைப்புகளை சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள் ஆசிரியர் சங்கங்கள், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்கள், மாணவர் அமைந்புக்கள், கடற்றொழிலாளர், சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள, செயலாளர்கள், மற்றும் வங்கி சேவையாளர்கள் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தத்தம் கோட்ட மட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16-ம் திகதி வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7-00 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். [இ]

## சுதந்திரப் பறவைகள் இன்று வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் 1994 மார்கழி-1995 தை மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

'அரசின் புனர்வாழ்வுத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும், 'தென் தமிழீழத்தில் ஒரு மௌன அலறல்' உட்பட பல ஆக்கங்கள் இந்த இதழில் வெளிவந்துள்ளன. -இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-